செய்தி வெளியீடு எண்.9/2019 நாள் 15.02.2019

## நெம்மேலி கடல் நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் பராமரிப்பு பணிகள் குடிநீர் வாரியம் அறிவிப்பு

நெம்மேலியிலுள்ள நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கடல் நீரை குடிநீராக்கும் நிலையத்தில் சில அவசர பராமரிப்பு பணிகள் 19.02.2019 காலை 06.00 மணி முதல் 20.02.2019 மாலை 6.00 மணி வரை நடைபெற உள்ளதால் திருவான்மியூர், கொட்டிவாக்கம், பாலவாக்கம், பெருங்குடி, அடையார், வேளச்சேரி, பெசன்ட் நகர், மைலாப்பூர், மந்தைவெளி சோழிங்கநல்லூர், ஈஞ்சம்பாக்கம், நீலாங்கரை போன்ற பகுதிகளுக்கு 19.02.2019 மற்றும் 20.02.2019 தேதிகளில் குடிநீர் வழங்குவதில் தடங்கல் ஏற்பட வாய்ப்புள்ளது.

இதனால் பொது மக்கள் முன் எச்சரிக்கையாக வேண்டிய அளவு குடிநீரை சேமித்து வைத்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். மேலும், அவசர தேவைக்கு லாரிகள் மூலம் குடிநீர் பெற்றுக் கொள்ள கீழ்க்காணும் அலுவலர்களை தொடர்பு கொள்ளவும்.

பகுதிப்பொறியாளர் / பகுதி –9–கைபேசி எண்.8144930909 (மைலாப்பூர், மந்தைவெளி)

பகுதிப்பொறியாளர் / பகுதி –13–கைபேசி எண்.8144930913 (அடையார், வேளச்சேரி, பெசன்ட் நகர், திருவான்மியூர்)

பகுதிப்பொறியாளர் / பகுதி –14–கைபேசி எண்8144930914 (கொட்டிவாக்கம், பாலவாக்கம், பெருங்குடி)

பகுதிப்பொறியாளர் / பகுதி –15–கைபேசி எண் 8144930915 ( ஈஞ்சம்பாக்கம், நீலாங்கரை, சோழிங்கநல்லூர்)

மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னை குடிநீர்